TAMIL MURASU, FRIDAY, 18 JANUARY 2019, PAGE 3

# டுரியான் விதையிலிருந்து உணவு மெருகூட்டி கண்டுபிடிப்பு



டுரியான் விதையிலிருந்து உணவு மெருகூட்டியையும் செரிமான மருந்தையும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் (என்டியு) ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

உணவு மெருகூட்டி உணவின் தன்மையை மேம்படுத்தி அதற்கு ஒரு மென்மையான தோற்றத்தை ஏற்படுத்தும். 'புரோபயோட்டிக்ஸ்' எனும் நுண்ணுயிர் மருந்தை உட்கொள் வோர் ஆரோக்கியமான செரிமானத்தைப் பெறுவார்கள்.

டுரியான் பழம் சிங்கப்பூரிலும் தென்கிழக்காசியாவிலும் மிகவும் பிரபலமாகத் திகழ்கிறது. 2018ஆம் ஆண்டு முதல் பாதியில் சிங்கப்பூரர்கள் ஆறு மில்லியன் டுரியான் பழங் களை உட்கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஆண்டுக்கு 12 மில்லியன் டுரியான் பழங்கள் சிங்கப் பூரில் உட்கொள்ளப்படும் வேளையில் அவற்றின் விதைக ளைக் கொண்டு இந்த உணவு மெருகூட்டியும் செரிமான மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன," என்றார் என்டியுவின் உணவு அறிவியல், தொழில்நுட்பத் திட்டத்தின் இயக்குநர் பேராசிரியர் வில்லியம் சென் (படத்தில் இடது).